# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**

**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**


## Part VI --- Section 2

(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

---

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**<u>2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு</u>**

**<u>(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–3, 31.05. 2006 நாளிட்டது)</u>**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதியினைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அந்த ஒழுங்குமுறை விதியினைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதியைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, **2003**ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **36/2003**) **181**ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்

பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் 21.07.2004 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்**

**1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்</u> :**

(a) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. <u>ஒழுங்குமுறைவிதிகளின் திருத்தம்</u> :**

(1) 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் (12) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக பின்வருவது அமைக்கப்படுகிறது **:–**

(12) புறம்போக்கு நிலத்தில் , –

(i) (துணைவட்டாட்சியர்படி நிலைக்குக் குறையாத) அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மறுப்பின்மைச் சான்றிதழ், அல்லது

(ii) மின்னிணைப்புக்கான விண்ணப்பதாரரால் அத்தகைய மறுப்பின்மைச் சான்றிதழை முன்னிலைப்படுத்த முடியாதவிடத்து, பின்வரும் ஏற்புறுதியை**:–**

(1) நான் காலி செய்வதற்குக் கடப்பாடுடையவன் என்பதும் மற்றும் அரசால் இந்த நிலங்கள் கோரப்படுமாயின் மற்றும் / அல்லது பிந்திய நாளில் பூசல் எதுவும் எழுமாயின், எந்த நேரத்திலும் மின்னிணைப்பு துண்டிக்கப்படும் மற்றும் இது பொறுத்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று நிலத்தின் உடைமையை கோருவதற்கு உரிமை இல்லை என்பதும் எனக்கு தெரியும்.

(2) மேலேயுள்ள ஏற்புறுதி நிலத்தின் உடைமைக்குரிய நிரந்தரமான மற்றும் முழு உரிமையை வழங்காது என்பதும் எனக்குத் தெரியும் என்று அளிக்கப்பட வேண்டிய ஏற்புறுதியை முன்னிலைப்படுத்துவதன் பேரில் மின்னிணைப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(2) பின்னிணைப்பு III—இல், படிவம் எண்.3இல் இனம், எண்.7இன், உள்—இனம் (c)க்குப் பின்பு பின்வருவது சேர்க்கப்படுதல் வேண்டும் :—

" (d) இது புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது மற்றும் நான் பின்வரும் ஏற்புறுதியை அளிக்கிறேன் :—

(1) நான் காலி செய்வதற்குக் கடப்பாடுடையவன் என்பதும், மற்றும் அரசால் இந்நிலங்கள் கோரப்படுமாயின் மற்றும் / அல்லது பிந்திய நாளில் பூசல் எதுவும் எழுமாயின், எந்த நேரத்திலும் மின்னிணைப்பு துண்டிக்கப்படும் மற்றும் இது பொறுத்து மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்று நிலத்தின் உடைமையைக் கோருவதற்கு உரிமை இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

(2) மேலேயுள்ள ஏற்புறுதி நிலத்தின் உடைமைக்குரிய நிரந்தரமான மற்றும் முழு உரிமையை வழங்காது என்பதும் எனக்குத் தெரியும். (பொருந்தாத கூறினை அடித்து விடுக )."

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

இரா. பாலசுப்பிரமணியன்
**செயலாளர்**